இருக்கிறது. காரணம் பேரணாம்பட்டு தொகுதியின் நீண்ட நாள் தேவைகள், கோரிக்கைகள், பத்திரபள்ளி அணைத் திட்டம், சார்பதிவாளர் அலுவலகம், தீயணைப்பு நிலையம், தொழில் கல்விக் கூடங்கள் போன்றவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தொகுதி மக்கள் விரும்புகிறார்கள். அந்தச் சாதனை 'பூ உலகின் புரட்சித் தெய்வம், தமிழக் கடவுள், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தான் முடியும் என்று எல்லோருக்கும் தெரியும். எனவே, கல்லூரிகள், தொழிற் கல்விக் கூடங்கள், இதுவரை பேரணாம்பட்டு தொகுதியில் இல்லாத காரணத்தால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் துவக்கி வரலாற்றை படைத்தார்கள், சாதனை படைத்தார்கள் என்ற வகையில் இந்த ஆண்டே தொழிற் கல்விக் கூடம் துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 21 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும், 13 தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தாலே இப்போது அரசினுடைய நிதி நிலைமையைக் கருதி புதிதாக பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற் பயிற்சிப் பள்ளி துவக்கபட மாட்டாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 605, திரு. தா. செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

605—

பெரம்பலூரில் தொழிற் பயிற்சிக் கல்லூரி

*9143 திரு. தா. செழியன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரம்பலூரில் தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10-20

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது ''

என்கின்ற வான்புகழ் கொண்ட வள்ளுவ பெருமகனாருடைய குறளுக்கு ஏற்ப நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தாலும், கோயில்கள் பல கட்டுவதைக் காட்டிலும், ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மிகப்பெரிய புண்ணியம் ஆகும் என்று கல்வியினுடைய பெருமையைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். எனவே, என்னுடைய பெரம்பலூர் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. இந்திய வரலாற்றிலேயே, ஏன் அகில உலக வரலாற்றிலேயே, சுதந்திரம் அடைந்து 45 ஆண்டுகள் ஆகியும் அந்த பெரம்பலூர் தொகுதியிலே எந்தவிதமான கல்லூரிகளோ, தொழில் நுட்பக் கல்லூரிகளோ அல்லது எந்தவிதமான தொழிற்சாலைகளோ இல்லாத ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டிலாவது ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை பெரம்பலூர் பகுதிக்குக் கொண்டு வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே 3 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 15 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் 10 தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் இன்றைக்கு இயங்கி வருகின்றன. புதிதாக ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், தொடரா இனச் செலவாக 55 இலட்ச ரூபாய்களும், தொடர் இனச் செலவாக 5 இலட்ச ரூபாயும், ஆக, 60 இலட்சம் ரூபாய் செலவாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இன்றைய சூழ்நிலையிலே பெரம்பலூர் தொகுதியிலே புதிதாகத் தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கின்ற சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடையாளி கர்ணனும், மாவீரன் சரித்திர தளபதி நெப்போலியனும், ' இல்லை ', ' முடியாது ' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதே கிடையாது. அதேபோல் அறங்காவல் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் எந்த மானியக் கோரிக்கையின் மீதும், வேண்டுதல் மீதும், ''இல்லை'', '' முடியாது''—அதைவிட, ஒரு பொருளை '' தெரியாது '' என்று சொல்வது கிடையாது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எழுந்தால் இமயம் ; நடந்தால் கங்கை ; சிரித்தால் வசந்தம் ; சீறினால் பிரளயம்.

1992 ஏப்ரல் 23]

கடலிலேயிருந்து அலையைப் பிரிக்கலாம்; கதிரவனிடமிருந்து ஒளியைப் பிரிக்கலாம்; மலரிலேயிருந்து மணத்தைப் பிரிக்கலாம்; ஆனால் மக்கள் மனதிலேயிருந்து புரட்சித் தலைவியை யாராலும் பிரிக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலேதான பெரம்பலூர் தொகுதி சிறப்படைய வேண்டும். வளம் அடைய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அதுமட்டுமல்லாது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செழியன், கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் இரண்டாவது துணைக் கேள்வி கேட்கிறீர்கள.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, பெரம்பலூர் தொகுதியிலே அதிகமாகப் படித்தவர்கள் இருக்கின்ற காரணத்தினாலும், மேலும் அவர்கள் படிபபதற்காக 100 கிலோ மீட்டா தூரம் சேலத்திற்கும் 60 கிலோ மீட்டர் தூரம் திருச்சிக்கும் செல்ல வேண்டியது இருக்கிறது. எனவே, எப்படியாவது, அடுத்த நிதி ஆண்டில் அல்ல; அதற்கடுத்த நிதியாண்டிலாவது ஒரு தொழிற் நுட்பக் கல்லூரியை பெரம்பலூர் தொகுதிக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொற் பாதங்களுக்கு ஒரு வேண்டுகோளாக விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 606, திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

606 சேலம் நகரில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடுக்குமாடி காலனி கட்டுதல்.

*4615 திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சேலம் நகரில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடுக்குமாடி காலனிகள கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.